விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 7 ஸபர் 19 இதழ் 256

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-10-1986

இன்று

## 'ஐ.நா.தினத்தை பகிஷ்கரித்து கரிநாளாக அனுஷ்டிக்கவும்'

### மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி மனித உரிமைகளைப் பல வழிகளிலும் மீறும் இலங்கை ஐ நாவில் அங்கம் வகிப்பமையால், இன்று நடைபெறும் ஐ நா தினத்தைப் பகிஷ்கரித்துக் கரிநாளாக அனுஷ்டிக்குமாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் (யாழ். கிளை) வேண்டுகோள் விடுத்துள்ளது.

அது தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளதாவது.

1978ல் இயற்றப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பு யாப்பின் மூன்றும் அத்தியாயத்தில் உள்ள 10ம், 17ம் பந்திகளில் சாதி, பாஷை, இன, மத வேறுபாடுகளின்றி சகல பிரஜைகளும் வழி நடத்தப்படுவர் எனக் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள்

(5ம் பக்கம் பார்க்க)

'ஷெல்' தாக்குதலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக

# மருத்துவபீட மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(நல்லூர் நிருபர்)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து கடந்த பல காலமாக இடம் பெற்றுவரும் ஷெல்' தாக்குதலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்கள்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து ஆரம்பமான இவ்வூர்வலத்தில் பெருந்தொகையான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மருத்துவ பீடத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட மாணவர்கள் பலாலிவீதியூடாகச் சென்று யாழ்பல்கலைக்கழக உபவேந்தர் காரியாலயத்தை அடைந்தனர்.

அங்கு உபவேந்தரைச் சந்தித்த மாணவர்கள் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் 'ஷெல்' தாக்குதலினால் யாழ். அரசினர் போதனாவைத்தியசாலை பாதிக்கப்படுவதுடன் அங்கு நடைபெறும் மருத்துவ பீட மாணவர்களின் செய்முறை வகுப்புக்கள் விரிவுரைகள் என்பனவும் பாதிக்கப்படுவதால் இச் 'ஷெல்' தாக்குதலை நிறுத்துமாறுகோரி உபவேந்தரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## "உயிரைப் பணயம் வைத்தே 'கிளினிக்' வகுப்புகளுக்கு செல்லவேண்டியுள்ளது"

யாழ்ப்பாணம், வெள்ளி "யாழ். ஆஸ்பத்திரி மீது மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல்தாக்குதல்களினால் மருத்துவ மாணவர்களாகிய நாம் பலவகையிலும் முடக்கப்பட்டுள்ளோம். எமது உயிரைப் பணயம் வைத்து எமது 'கிளினிக்' வகுப்புகளுக்குச் செல்ல

[8ம் பக்கம் பார்க்க]

## 1600 தொன் மாவுடன் கப்பல்

சுண்டிக்குளி, வியா.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஆயிரம் தொன் எடையுள்ள மாவுடன் 'மத்துரட்ட' என்னும் கப்பல் கடந்த 18-ம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ளது.

இக்கப்பலிலிருந்து இதுவரை இறக்குமதி வேலைகள் நடைபெறவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் குரலும் தமிழீழத்தின் குரலும் பிரான்ஸில் ஒலிக்கிறது

(என். கடம்பகுமார்)

பிரான்ஸில் தமிழீழத்தின் குரல் பிரான்ஸ் வானொலி மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. கடந்த வருடம் முதல் பிரான்ஸில் இவ்வொலிபரப்பு ஆரம்பமானது.

இவ் வருட முதல் பகுதியில் இவ் வானொலியின் உபகரணங்கள் பிரான்ஸ் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இவ் வானொலி

(5ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்ற கூட்டத்தில் பங்குபற்ற

## நாலு எம். பிக்களுக்கு ஒரு வாரகாலத் தடை

கொழும்பு, வியா.

பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேருக்கு ஒருவார காலத்துக்குப் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தனகலை எம். பி. லஷ்மன் ஜெயக்கொடி, மத்தேகம எம் பி அமரசிறி. அமீமனத் தொகுதி எம்.பி றிச்சேர்ட்பத்திரன, சொறிபலை எம்.பி ஆனந்த திஸ்ஸநாயக்கா ஆகியோருக்கே மேற்படித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஆர் பிரேமதாஸா பேசுவதற்கு எழுந்தபோது சபைத் தலைவரின் உத்தரவையும் ஊதசீனம் செய்து சபையில் குறுக்கீடு செய்தது தொடர்பாகவே இந்த ஒரு வாரகாலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

## 40 வருடங்களின் பின் நடைபெறும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி

(விளையாட்டு நிருபர்)

யாழ். மாவட்டத்தில் 40 வருடங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக சகல முன்னணிப் பாடசாலைகளும் கலந்து கொள்ளும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியை மாணவ முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்துகின்றன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு 22 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

போட்டிகள் யாவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 'நொக்கவுட்' முறையில் நாளை முதல் ஆரம்பமாகின்றன.

பிரிவு 'ஏ'

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இளவாலை சென்.

(8ம் பக்கம் பார்க்க)

272 தமிழ் இளைஞர்கள் மறைவு பற்றிய குற்றச்சாட்டை மறுத்து

## இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவுக்கு சத்தியக்கூற்றுப்' பத்திரம் தாக்கல்

(நமது நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டங்களின் கீழ் இலங்கை அரசினால் கைதுசெய்யப்பட்ட 272 தமிழ் இளைஞர்கள் பற்றி எதவிதத் தகவல்களும் வெளியிடப்படவில்லையெனவும் அவர்கள் இலங்கை அரச படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது சிறைச்சாலைகளில் இறந்துள்ளனரென நம்பப்படுகிறதென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ள குற்றச்சாட்டை ஆட்சேபித்து இலங்கை அரசு சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சத்தியக் கூற்றுப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

சர்வ மனித ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள சத்தியக் கூற்றுப் பத்திரத்தில் தனக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை இலங்கை அரசு பலமாக மறுதலித்ததுடன் நாட்டில் காணமல் போய் விட்டதாகக் கூறப்படும் 250க்கு மேலான தமிழ் இளைஞர்களின் விதிபற்றி விளக்கமளிப்பதற்குத் தமக்கு எதுவித கடப்பாடுமில்லையெனத் தெரிவித்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## தேவை

( கிறீசர் – GREASER )

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க சேவிஸ் ஸ்ரேசனுக்கு கிறீசர் தேவை.

மேற்படி தொழிலில் மூன் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி என விலாசமிட்டு

30-10-86க்கு முன் அனுப்பி வைக்கவும்.

சம்பளம் நேரில் பேசி நிர்ணயிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
சாவகச்சேரி.

(C 5368)

ஈழம் தபால்சேவை

## காட்டிக்கொடுக்க முனைந்த உயரதிகாரி கைது

### ஈ. பி. ஆர். எல். எவ். தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி ஈழம் தபால்தலைகள் ஒட்டப்பட்ட 85 தபால்களை கொழும்பிலுள்ள தபால் திணைக்களத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப முற்பட்ட உயரதிகாரி ஒருவர் தமது கண்காணிப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளாரென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேலும் தெரிவிக்கையில்:

(5ம் பக்கம் பார்க்க)

புலிகளால் கைதுசெய்யப்பட்ட

## சிப்பாய்களை விடுவிக்க எவருடனும் ஒப்பந்தம் செய்யவில்லை

### அரசு அறிக்கை

கொழும்பு, வியாழன்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் அடம்பனில் வைத்துக் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவத்தினரையும் விடுவிப்பதற்கு புலிகளுடன் தாம் எந்த வித ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை என்று அரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தவித நிபந்தனைகளுமின்றி இரண்டு இராணுவத்தினரையும் அழைத்துவருவதானால் மக்கள் கட்சி பொதுச்செயலாளர் விஜயகுமாரணதுங்காவிற்கு சகல வசதிகளும் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு நாள் சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு வளர்ப்பவர்கள் தொடர்புகொள்ளவும், அண்ணு பாம், இணுவில். [A-3001]

பிரபல இஸ்லாமிய புத்தக வியாபாரியின் வேண்டுகோள்: பத்றிஸ் வேண்டுமானால் மொத்தமாக [illegible] எடுப்பவர்களுக்கு மலிவாகப் பெறலாம். தொடர்பு கொள்ளும் விலாசம்;- பிரபல இஸ்லாமிய புத்தக வியாபாரி 11/1 ஏ. பி. லேன், யாழ்ப்பாணம். [C-5367]

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் MPCS இற்கு அருகாமையில் கிணற்றுப்பங்குடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல. C 5319 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C5319)

இறக்குமதி செய்யப்பட்ட ''மீன சாப்பாடு'' Fish Max விற்பனைக்குண்டு. 1 பெக்கட் ரூபா 5-00 வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. MGM 777. KKS Rd. and 208. Ist Cross St Jaffna. T. P. 22611, [C 5074]

தீபாவளி மலிவு விற்பனை. புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T V.Stands, Bock Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள் விலை குறைப்பு தீபாவளிவரை மட்டுமே. கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை, இல: 22, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24149. [C 1491]

வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அல்மாரி, கட்டில் மெத்தைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Teak கதிரைகள், வயலின், Ladies சைக்கிள், Kenwood Chef, Carrom Board. 14'' National கலர் T.V, T.V Stand Show case, கசற் றேடியோ, எவர்சில்வர், பித்தளை, கிளாஸ், கோப்பை வகைகள் Pyrex Ice flask, Fans, Water filter, Johnson Dinner Set, பெரிய தேக்கு Show case மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C 5365]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. C 5361, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5361]

யாழ்ப்பாணத்தில் அமைக்கவிருக்கும் ஒரு நிறுவனத்திற்கு சிறு தொகை பங்காளர்கள் தேவை. விண்ணப்பங்கள் 31-10-86 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விபரத்திற்கு 426/1, கில்னர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [C 5360]

நன்கு அனுபவம் உள்ள சமயல்வேலை தெரிந்தவர் றேக்ஸ் பற்றிஸ் தயாரிக்கக் கூடியவர்களும், தேநீர், கோப்பி தயாரிக்கக் கூடியவர்களும் தேவை. நேரில் வரவும் றிக்கோ, 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 5370]

மானிப்பாய் பகுதியில் பிரபல்யமான இடத்தில் தனியார் கல்வி நிறுவனம் நடத்துவதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. C 5326, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C5326)

பிரயாண முகவர் நிலையமொன்றுக்கு பெண் வரவேற்பாளர்கள் தேவை. ஆங்கிலம் சரளமாகப் பேசுபவராயும், சுருக்கெழுத்து தட்டெழுத்துச் செய்வதில் கல்விச் சான்றிதழ்களும் பெற்றுள்ளவரும் வயது 22—30 வரை இருப்பதும் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி: 31-10 86. தொடர்பு: Gloria Travels, சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய். (A-1485)

யாழ்நகரைச் சேர்ந்த சிறிய குடும்பத்துக்கு கொழும்பில் சமையல் வேலைபார்ப்பதற்கு பெண்தேவை. உணவு இருப்பிடவசதி கொடுத்து சம்பளம் ரூ 300/- கொடுக்கப்படும் அன்பாய் கவனிக்கப்படுவர். விரும்பியோர் 25-10-86 அல்லது 26-10-86 திகதிகளில் காலை 8-00 மணிதொடக்கம் 12-00 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி T. சவரிமுத்து, 51, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [C 5362]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு மிக அண்மையில் மாணவிகளுக்கு சாப்பாட்டுடன்/சாப்பாடில்லாமல் தங்குமிட வசதி உண்டு. 148, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். [C-5372]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வகுப்புகள்

G.C E. O/L Dec 86. மாதிரி ஆங்கில வினாத்தாள் மீட்டல் வகுப்புகள். இலவச விணப்பத்திரங்களுடன் ஆரம்பம் கிழமை நாட்களிலும். வார இறுதியிலும் 2-11-86/ 3-11-86 விபரங்கட்கு தொடர்பு: S B IYAR, 12 வைமன்வீதி, நல்லூர். (C5347)

Radio-TV, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைண்டிங், தட்டெழுத்து சுருக்கெழுத்து 25-10-86ல் ஆரம்பமாகவுள்ளன. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். Vispa Engineering Aid Hall 328. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5302

## சேவை

உங்களிடம் உள்ள பழையவீட்டுப் பாவனைப் பொருட்களை உடன் எம்மிடம் விற்கவோ அல்லது மாற்றுதல் செய்யவோ உடன்தொடர்புகொள்ளவும் வெளிநாடு செல்பவர்களும் உங்கள் பொருட்களை நியாய விலைக்கு உடன் விற்பனை செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்:- M. தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். [C 5364]

மகளிர் குழுப் பொருட்காட்சியில் மில்க்வைற் - 25-10 86 திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும் பொருட்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பரக் காட்சிச்சாலையில் ரூபா. 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய ஸ்ரிக்கர், அறிவு நூல்கள், மில்க்வைற் செய்தி, கீரைவிதைகள், பொலித்தீன் ஈகை மற்றும் மரக்கன்று ஒன்றும் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம் -மில்க்வைற், யாழ்ப்பாணம் [A 1486]

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை

### மின்சார நிலுவைகள் அறவிடுதல்

மின் மொத்தக் கொள்வனவு கொடுப்பனவாக யாழ். அபிவிருத்திச் சபையால் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தவேண்டிய 350 இலட்சம் ரூபாவை உடன் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மின்பாவனையாளர்கள் தங்கள் பெயரிலுள்ள நிலுவைகளைச் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு சரிபார்த்து உடன் செலுத்தி ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன். மூன்று மாதங்களுக்குமேல் மின் கட்டணம் செலுத்தாமல் உள்ள மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டபின், இரு நாட்களுக்குள் நிலுவையைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக நிலுவையின் 10%ம் தண்டமாக அறவிடப்படும் என்பதை இத்தால் சகல மின் பாவனையாளர்கட்கும் அறியத்தருகிறேன்.

**வை. மு. பஞ்சலிங்கம்'**
செயலாளர்'
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை.

அபிவிருத்திச் சபை
அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்: [A-1497]

### சசிபாரதி கதைகள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியா 'ஈழநாடு' வாரமலர் ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு. க. சபாரத்தினத்தின் முப்பத்தாறு வருடகால பத்திரிகைச் சேவை விழாவும் 'சசிபாரதி கதைகள்' வெளியீட்டு விழாவும் நல்லூர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு க. சொக்கன் 'சசிபாரதி கதைகள்' எனும் நூலை அறிமுகம் செய்து உரையாற்றுவார்.

கலை இலக்கிய பத்திரிகைத் துறைப் பிரமுகர்கள் பலர் உரையாற்றுவார்கள். (ச-ஒ)

### யாழ்ப்பாணம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

### வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 4500 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு. கேள்வி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் முடிவுத் திகதி 28-10-86 கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்.**
259, மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம். [A-1499]

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### நில அளவை செய்யும் உபகரணங்கள் விநியோகித்தல்

### கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்கு, நில அளவை செய்யும் உபகரணங்களை விநியோகிக்கக்கூடியவர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1986ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை இதற்கான படிவங்களை நல்லூர் அம்மன் வீதியிலுள்ள மராமத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதுடன் மேலதிக விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

**சீ. வீ. கே, சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம். [A-1500]

### கேதார கௌரி நோன்பு பூசை

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலயத்தில் 1-11-86 கேதாரகௌரி நோன்பை முன்னிட்டு பிரதம குருக்களால் காப்பு நூல் கட்டப்படும். 30-10-86க்கு முன் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

நோன்பு நூல் ரூபா 15/:
நைவேத்தியப் பெட்டியுடன் ரூபா 60/-
(C 5363)

### Radio & T.V. Engineering Course

இலெக்ரோனிக் துறையில் தற்பொழுது வேலை செய்வோர் பலரின் வேண்டுகோளின்படி விசேஷ வகுப்புகள் (ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்) 26-10-86ல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் விபரங்களுக்கு:

**CANTABIA INSTITUTE**
21, MAIN STREET, JAFFNA.
[C 2814] 'Phone 24201

### எமது புதிய வெளியீடுகள்

1. ★ கமல் ★ ராதிகா ★ தீபா
"சிப்பிக்குள் முத்து" (Pyramid Mastcr)
2. ஜெயசங்கர் ★ ஜெயலலிதா ★ நாகேஷ்
"நீ" (PYRAMID MASTER)
3. A.V M. ராஜன் ★ பானுமதி ★ முத்துராமன்
"பூவும் பொட்டும்" (PYRAMID MASTER)
4. எம் ஜி ஆர். ★ சரோஜாதேவி ★ தங்கவேலு
"திருடாதே" (CAMERA COPY)
5. ரவிச்சந்திரன் ★ ஜெயலலிதா ★ நாகேஷ்
"நான்கு சுவர்கள்" (CAMERA COPY)
6. சோ ★ சுபா ★ மனோரமா ★ தங்கவேலு
'உங்கவீட்டுக்கல்யாணம்" (CAMERA COPY)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(A 2815) தொலைபேசி: 23665

### உடன் விற்பனைக்குண்டு

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கமைய நாற்று போடப்பட்டவை.

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

(1) ஷப்ரு றிலேற்றஸ்
தென்னந்தோட்டம்
குடமியன்,
வரணி.

(2) மின்சாரநிலைய வீதி.
இல. 15, 2ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(C 5352)

# இந்திய அமைச்சரவையில் புதிய மாற்றங்கள்

## அருண்நேரு பதவி நீக்கம்!

புதுடில்லி, ஆக்டோபர் 23

**இந்திய அமைச்சரவையிலிருந்து ஐந்து அமைச்சர்கள் நீக்கப்பட்டுள்ளனர். ஏழு பேர் புதிய அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர். இந்த ஆண்டில் இந்திய அமைச்சரவையில் இடம்பெற்ற நான்காவது மாற்றம் இதுவாகும். இத்துடன் திரு. ராஜீவ் காந்தி பிரதமரான பின்னர் இடம்பெறும் ஆறுவது அமைச்சரவை மாற்றமும் இதுவென்று தெரிவிக்கப்பட்டது.**

ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸினுள் நிலவும் உட்கட்சிப் பூசலகளே இந்த மாற்றங்களுக்கு முக்கிய காரணமென்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு இணை அமைச்சராக முக்கிய பதவி வகித்த திரு. அருண் நேருவும் இப்பதிய மாற்றத்தின்கீழ் பதவி நீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் மிக நெருங்கிய உறவினர் என்பதும் முக்கிய அம்சமாகும்.

திரு அருண் நேரு இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் திரு. ராஜீவ் காந்திக்கு எதிராகச் செயல்பட்டார் என்ற காரணத்தினாலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. அருண் நேரு இந்திய அரசியலில் திரு ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக மிகவும் செல்வாக்குப்பெற்ற ஒருவர் எனவும் கூறப்பட்டது.

புதிய மாற்றங்களின்கீழ்

### உலகச் செய்திகள்

வெளிநாட்டமைச்சராக திரு. என் டி. திவாரி நியமிக்கப் பட்டுள்ளார். இதுவரைகாலமும் இப்பதவியை வகித்த திரு. சிவசங்கர் கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இ காங்கிரஸ் துணைத்தலைவர் திரு அர்ஜன்சிங், முன்னைஸ் ஹரியாணு மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் ஆகியோர் புதிய அமைச்சர்களாகச் சேர்க்கப்பட்டோரில் பிரதானமானவர்களாவர்.

இம்மாற்றங்களையடுத்து 56 ஆக இருந்த இந்திய அமைச்சரவை எண்ணிக்கை 58 ஆக உயர்வடைந்துள்ளது.

# மேலும் 5 அமெரிக்கர்களை சோவியத் வெளியேற்றியது!

மாஸ்கோ, அக். 23

அமெரிக்காவிலிருந்து 55 சோவியத் தூதரக அதிகாரிகள் வெளியேற்றப்பட்டதற்குப் பதில் நடவடிக்கையாக மேலும் ஐந்து அமெரிக்கர்களை சோவியத்யூனியன் தனது நாட்டிலிருந்து வெளியேற்றியுள்ளது

சோவியத் யூனியன் முன்பு 5 அமெரிக்கர்களை மாஸ்கோவிலிருந்து வெளியேற்றியிருந்தது இதற்குப் பதிலாகவே அமெரிக்கா 55 சோவியத் அதிகாரிகளை வெளியேற்றியது. தொடர்ந்து இதற்கு எதிர் நடவடிக்கையாக மேலும் 5 அமெரிக்கர்களை சோவியத் வெளியேற்றியுள்ளது.

சோவியத் யூனியன் இறுதியாக வெளியேற்றிய 5 அமெரிக்கர்களுடன், மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலும், லெனின்கிராட்டிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்திலும் கடமைபுரியும் சுமார் 260 சோவியத் நாட்டவர்களையும் அவர்களின் பணியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளது.

இத்துடன் சோவியத்யூனியனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரியும் அமெரிக்கர்கள் தொடர்பாகவும் புதிய கட்டுப்பாடுகளை சோவியத் கொண்டுவந்துள்ளது

# சி. ஐ. ஏக்கு வேவு பார்த்த--- சோவியத் நாட்டவருக்கு மரணதண்டனை!

மாஸ்கோ, அக் 23

அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி ஐ ஏ.க்காக உளவுபார்த்த குற்றச்சாட்டுத் தொடர்பாக சோவியத் பிரஜை ஒருவர் தூக்கிலிடப்பட்டார்.

இத்தூக்குத் தண்டனை சோவியத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஆயினும் தூக்கிலிடப்பட்டவரின் பெயர், மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட இடம் ஆகியவற்றின் விபரங்களை சோவியத் வெளியிடவில்லை.

சோவியத் யூனியனிலிருந்த அமெரிக்க ராஜதந்திரி ஒருவரூடாகவே சி ஐ ஏக்குமேற்படி சோவியத நாட்டவர் யூனியன் பற்றித் தகவல்களை வழங்கினார் என்றும் இத்தகவல்களில் முக்கியமானவை, சோவியத்தின் பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்ட விடயங்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு இந்த சோவியத் உளவாளி கைதானார்.

# மொசாம்பிக் ஜனாதிபதியின்--- விமானம் ஏவுகணையினால் சுடப்பட்டது!

## விமானி கூறுகிறார்!

மபட்டோ, அக். 23

கடந்த வாரம் விபத்துக்குள்ளான மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மசேலின் விமானம் ஏவுகணையினால் சுடப்பட்டதையடுத்தே விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தகவலை இவ்விபத்தில் உயிர் தப்பிய அவ்விமானத்தின் விமானி தெரிவித்துள்ளார். இந்த விமானி ஒரு சோவியத் நாட்டவர் என்பதும், விபத்துக்குள்ளான விமானம் ஒரு சோவியத் தயாரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மசேலும் அவரது சில சிரேஷ்ட அமைச்சரவை உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகள் பயணஞ்செய்த அவ்விமானம் தென்னாபிரிக்கா பிரதேசத்திலேயே விபத்துக்குள்ளானது.

தென்னாபிரிக்க அரசாங்கமே இவ்விபத்துக்குப்பொறுப்பாகும் என்று பல ஆபிரிக்க நாடுகளும், அரசியல் அவதானிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தவேளை விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைவுகளை ஆராய்ந்த விமானத் தயாரிப்பு நிபுணர்கள், அவ்விமானம் மிகவும் தரக்குறைவான இயந்திர செயல்பாட்டைக்கொண்டிருந்ததென தெரிவித்துள்ளனர்.

# சந்தைக்குச் சென்ற விவசாயி மாரடைப்பினால் மரணம்

பண்டத்தரிப்பு, வியா

பண்டத்தரிப்பு சந்தைக்கு மரவெள்ளிக்கிழங்கு விற்பதற்காகச் சென்ற மாரீசன்கூடல் வாசி ஒருவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் மயக்கமடைந்த நிலையில் வழியில் மரணமானார்.

கடந்த திங்கட்கிழமை காலையில் மாரீசன்கூடலிலுள்ள தமது தோட்டத்திலிருந்து மரவெள்ளிக்கிழங்கை எடுத்துக்கொண்டு பண்டத்தரிப்பு சந்தைக்கு நடந்து வந்த சிவகணம் என்னும் மேற்படி விவசாயி மாதகலில் பழைய தபால் கந்தோருக்கு சமீபமாக வரும்போது நெஞ்சு வலிக்கிறது என்று கூறிக்கொண்டு விழுந்து விட்டதாகவும் சிறிது நேரத்தில் அவ்விடத்திலேயே அவரது உயிர் பிரிந்துவிட்டதாகவும், பின்னர் உறவினர்கள் வந்து அவரது சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

# தெல்லிப்பழையில்--- கூட்டுறவு பொருட்காட்சியும் மகளிர் ஆண்டு விழாவும்

தெல்லிப்பழை வியா

கூட்டுறவு அமைப்பின் 75-வது ஆண்டு நிறைவும் பொருட்காட்சியும் மகளிர் குழுவின் ஆண்டுவிழாவும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் எதிாவரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளன

தெல்லிப்பழை ப நோ. கூ. சங்க மகளிர் குழுவினரால் நடாத்தப்படும் இவ்வைபவத்தின் பொருட்காட்சியை யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் ச. வேலாயுத பிள்ளையும் அவரது துணைவியார் திருமதி ச வேலாயுத பிள்ளையும், தொழிலதிபர் க கனகராசாவும் 25ம் திகதி சனிக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கிறார்கள்.

மகளிர் குழுவின் ஆண்டு விழா 26ம் திகதி ஞாயிறு பிற்பகல மகளிர்குழுத் தலைவி திருமதி சசிதேவி கந்தையா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் கலந்துகொள்கிறார். யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவு சபை, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் சி. சிவமகாராசா சிறப்புரை ஆற்றுகின்றார். தெல்லி உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் பரிசில்கள் வழங்கி சிறப்புரையாற்றுவார். இவ்வைபவங்களை ஒட்டி கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

# மூவரும் விடுதலை

வவனியா, வியாழன்

வவனியா ஹொரவப்பொத்தானை வீதி இறம்பைக்குளத்தில் அண்மையில் பாலத்தின் கீழ் இருந்த கண்ணிவெடி வெடித்ததினை அடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணையின்பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். [ஒ]


# பவர்ஸ் உரம்

வெல்லமுடியாதது

ரூபா 2,000/- க்கும் மேல்

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் விதி,
கொழும்பு-1.

MASTERS ABC 6.85 (c)

## மணிவாக்கு

வேறெதையும்விட உண்மை எப்பொழுதுமே பாதுகாப்பானது. ஒரு திட்டமிட்ட காரணத்துக்காக எவன் உண்மையை மறைக்கிருனோ அவன் ஒரு கோழை அல்லது குற்றம்புரிந்தவன். அல்லது இரண்டுமாவான்.

—மாக்ஸ் முல்லா.

## நமது நோக்கு

# விஜயனின் வருகையும் 'விஜே'யின் விஜயமும்

வட இந்தியாவிலிருந்து இலங்கையில் வந்திறங்கிய விஜயன் இந்த நாட்டில் நாகரிகம் தோன்றக் காரணமாய் அமைந்தான். இராட்சத குணம்படைத்த குவேனியையும் கூட்டத்தாரையும் காட்டுக்குத் துரத்திவிட்டு தென்னிந்தியாவிலிருந்து ஒரு அரசகுமாரியை தருவித்து தான் திருமணம் செய்துகொண்டதோடு. தனது நண்பர்களுக்கும் அங்கிருந்தே இளம்பெண்களைக் கொண்டு வந்து மணமுடித்து வைத்தான் என்பர்.

சான்று இல்லாத இந்தச் சரித்திரம் இப்போது மறக்கப்பட்டுவந்தாலும், சிங்கள இனத்தவர் இந்த நாட்டில் நிலைபெறவும், வளர்ச்சியடையவும் தமிழ் இனத்தவர்கள் வெகுகாலம் தொட்டே எவ்வளவு தூரம் உதவிவந்துள்ளார்கள் என்பதை இக்கதை எடுத்துக் காட்டுகின்றது.

சிங்கபாகுவின் மகன் விஜயனின் அன்றைய இலங்கை விஜயத்துக்கும் முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் மருமகன் 'விஜே'யின் இன்றைய விஜயத்துக்கும் எதுவித ஒற்றுமையும்இல்லைத்தான், என்றாலும் இங்கே தமிழ் மக்கள் வதியும் பிரதேசங்களிலுள்ள உண்மை நிலைமையை தென்னிலங்கைப் பிரமுகர் ஒருவர் நேரில் பார்க்கவும், சிங்கள மக்கள் மத்தியில் அதிபயங்கரமாக வர்ணிக்கப்பட்டுவரும் தமிழ்ப் போராளிகளை நேரில் சந்திக்கவும் ஒரு வாய்ப்பாக இது அமைந்ததெனலாம்.

மன்னார் அடம்பனில் நடந்த நேரடி மோதலில் தமது தரப்பில் முன்னணி வீரர்கள் இருவரை இழந்த போதிலும் போரில் மாண்ட 9 ராணுவச்சிப்பாய்களின் சடலங்களையும், உயிருடன் பிடித்த இரு சிப்பாய்களையும் மிக இலகுவாக யாழ்ப்பாண நகருக்கு கொண்டுவந்து பொதுமக்களின் பார்வைக்கு வைத்ததுமட்டுமின்றி, இறந்த சிப்பாய்களின் சடலங்களை மிக மனிதாபிமானத்தோடு திருப்பியும் கொடுத்துள்ள தமிழ்ப்போராளிகளின் சாதுர்யத்தை இலங்கை அரசின்வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூடிமறைக்க எடுத்த முயற்சிகளை விஜேயின் இந்த விஜயம் தவிடுபொடியாக்கியுள்ளது.

திரு. குமாரணதுங்கதாம் இங்கு கண்டவை கேட்டவைகளை சிங்கள மக்கள் முன் வெளியிடுவதற்கு அவை ஆதரவளிக்காமல் போனாலும், பகிரங்க மேடைகளில் அவர் இவைகளை வெளிப்படுத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

உயிருடன் பிடிக்கப்பட்டுள்ள சிப்பாய்களை திருப்பிப் பெற்றுத்தரும்படி அவர்களின் பெற்றோரும் உறவினர்களும் ஏன் சக சிப்பாய்களும் கூட அரசாங்கத்தை நெருக்கவே செய்வார்கள்.

உயிரற்ற சடலங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமானால் உயிருள்ள கைதிகளைப் பெற்றுக்கொள்ள அரசு ஏன் தயங்கவேண்டும்?

போராளிகள் விதித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதே அரசுக்குள்ள சிக்கல். அதனை நிறைவேற்றுதுபோனால், உயிருடனுள்ள இரு சிப்பாய்களை போராளிகள் திருப்பித்தர மாட்டார்கள். உயிருடன் மீட்டுத்தர முடியாது போனால் தென்னிலங்கையில் பெரும் அரசியல் கொந்தளிப்புக்கு இட்முண்டு

இவ்வாறு இரண்டும் கெட்டான் நிலையில் அரசு இருக்கின்றது.

எதுவானாலும் போராளிகள் பெருந்தன்மையோடு உயிருடன் சிப்பாய்களைத் திருப்பித் தருவதற்கு முன்வந்திருப்பதை அரசாங்கம் பொறுப்போடும், புரிந்துணர்வோடும் அணுகி செயல்படுவது அவசியம்.

இந்த முயற்சியில் தொடர்ந்தும் வழமைபோல் வறட்டுத்தனமான கௌரவத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது.

அமெரிக்கத் தம்பதிகளை மீட்டுக்கொடுப்பதற்கு அரசும் அதன் தலைவர்களும் பட்டபாட்டை நாம் அறிவோம்.

இப்போது பிடிபட்டிருப்பவர்கள் இந்த அரசுக்காக போராடப் புறப்பட்ட சிங்கள தேசியத்தின் புதல்வர்கள். அலன் தம்பதிகளை விட இவர்களின் உயிர்களை அரசு பெரிதாக மதித்திட வேண்டும்.

எனவே திரு. விஜேகுமாரணதுங்காவின யாழ்ப்பாண விஜயமும், அதையொட்டி அவர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் நடத்தும் பேச்சுக்களும், புதிய சகாப்தம் ஒன்றை - ஒரு திருப்பத்தை இங்கு ஏற்படுத்துமானால் விஜயனின் இலங்கை விஜயம் போன்று இதுவும் ஒரு சரித்திர சம்பவமாகலாம்.

அரசு என்ன செய்யப் போகிறது? இதற்குங்கூட இஸ்ரேலிய பூரண குருவின் ஔடதம் தான் மருந்து என்று கருதப்படுமானால் பஸ்ஸைத் தவறவிட்டவன் நிலைக்குள் அரசு தள்ளப்பட்டுவிடும்.

## தலைவர் தெரிவு

பருத்தித்துறை வியாழன் வைத்திய கலாநிதி கனக சுகுமார் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# உலக அமைதி சாத்தியமா?

உலக சமாதானத்தை நிலை நிறுத்தும் பொருட்டு கட்டியெழுப்பப்பட்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் சபையாகும். ஆயினும் உலகில் போரே எங்கும் வியாபித்து முன்னணியில் நிற்கின்றது. லட்சக்கணக்கான மனிதஉயிர்கள் நாளும் பலியாவதனால் ஐ. நாவின் சமாதானக் கொடி அரைக்கம்பத்தில் நாளும் பறக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஐக்கிய நாடுகள்சபை 1945ம் ஆண்டு அக்டோபர் 24 ம் திகதி தான் உத்தியோக பூர்வமாக அமெரிக்காவின் தலைநகரான நியூயோர்க்கில் அங்குராரிப்பணம் செய்து வைக்கப்பட்டது. அந்நாளிலிருந்து வருடாவருடம் அத்தினம் கொண்டாப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை உருவாகிய நாளிலிருந்து இன்று வரை பல்வேறு வகையான கட்டங்களில் வளர்ச்சியடைந்து வந்த போதிலும்கூட, ஐ. நாவின் உயர்நோக்கங்கள்

ஐ. நா அமைப்பு உருவாவதற்கு முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாடுகள் தமக்கிடையிலான பிணக்குகள், கருத்து வேற்றுமைகளை இராஜிய மட்டத்திலேயே தீர்த்துக் கொண்டன.

இவை சற்று வளர்ச்சியடைந்து முதலாவது உலக யுத்தத்தின் பின்பு உலகின் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டி 'சர்வதேச சங்கம், என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இறுதியில் உலகப் பிரச்னைகளைத் தீர்க்கப் புறப்பட்ட சபை தனது பிரச்னைகளையே தீர்க்க முடியாமல் கலைந்து கொண்டது

உலகோ இன்று கலகமேடையாகி விட்டது உலகில் நாளொன்றுக்கு 65 கோடி மக்கள் இரவில் உண்ணாது பட்டினிகிடக்கின்றனர் அதே சமயம் கோடிக்கணக்கான டொலர்களை பாதுகாப்புக்கென வல்லரசு நாடுகள், இராணுவ தளபாட ளெவனவுக்கும், உற்பத்திக்கும் நவீன மனித ஒழிப்புச்சாதனங்களை கண்டு பிடிப்பதற்கும்

ஐ. நா. சபைக்கு அப் பிரச்னைகள் வந்தாலும் ஐந்து வல்லரசுகளும் தமது வீட்டோ அதிகாரத்தை வைத்து பலப் பரீட்சையை மேற்கொள்ளும்

இதுவரை இந்த ஐந்து நாடுகளின் 'வீட்டோ' அதிகாரங்களின் மூலம் சிறுபான்மை மக்களுக்கு எதுவித நீதியும் கிடைத்ததாகவில்லை.

மேலும் வியட்நாமில் அமெரிக்காவின் தலையீடு. ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் ஆக்கிரமிப்பு. பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் இன ஒழிப்பு இந்திய பாகிஸ்தான் கஷ்மீர் பிரச்னை கொரியப் பிரசனை என்பவற்றிலும் ஐ நா சாதகமான வெற்றி தனையும் ஈட்டித்தரவில்லை. அத்துடன் இன்று தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள் நடாத்தி வரும் போராட்டத்தில்ஐ நா. எவ்விதமான நீதியான தீர்வையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை

முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையில் உயர்ந்து நிற்கும் கட்டிடமே ஐ நா. சபை என்று உலக அவதானிகள் கருதுகிறார்கள்.

## ஐ. நா. எதிர்நோக்கும் பெரும் சவால்

அபிலாஷைகள் யாவும்பூர்த்தியடைடவில்லை என்றே கூற வேண்டும். ஆனாலும் உறுப்பினர் தொகையால் மட்டும் ஐ நா. உயர்ந்துள்ளது. ஆரம்பத்தில் 51 நாடுகளுடன் ஆரம்பித்து இன்று 159 நாடுகளுடன் திகழ்கிறது.

ஐக்கிய அமெரிக்கா, சோவியத யூனியன், சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளே ஐக்கிய நாடுகள் சபைக்கு உறுதியாகவும், வழிகாட்டலாகவும் அமைந்துள்ளன. அத்துடன் மேற்படி ஐந்து நாடுகளுக்கும் 'வீட்டோ' அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

செலவிடுகின்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் போர் முறை கூட காலாவதியாகி இன்று நட்சத்திரப் போரை அமெரிக்க போன்ற வல்லரசு நாடுகள் முன்னெடுக்கின்றன.

அண்மையில் 'ரெய்க்ஜாவிக்'இல் அமெரிக்கா சோவியத் தலைவர்கள் சந்திப்பின் போது கூட அமெரிக்க அதிபர் திரு றீகன். "நட்சத்திரப் போர் முறையே அமெரிக்காவின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கக் கூடியது. சோவியத் யூனியனை, ஜெனிவாவிலும், ரெய்க்ஜவிக்கிலும் பேச்சு நடத்த தூண்டியதே இந்த நட்சத்திரப் போர் முறையாகும்" என்று கூறியுள்ளார்

திரு. றீகனின் மேற்படி பேச்சே 'ரெய்க்ஜாவிக்' பேச்சுக்கள் தோல்விக்கு காரணமென அமெரிக்க மக்களே கருத்து வெளியிட்டபோதும் றீகன் தனது முயலுக்கு மூன்று கால்' என்று நிற்கிறார்.

'ஐ நா. சபை உலகசமாதானத்திற்கு அதிக தோண்டாற்றவில்லை' என்று உலக நாடுகள் குறிப்பிட்டபோது

### ஐ. நா வின் அமைப்பு

ஐ. நா வின் ஐரோப்பிய செயலகமொன்று ஜெனீவாவில்அமைந்துள்ளது. இதன் கிளைகள் உலகெங்கும் வியாபித்துள்ளன.

ஐ நா. வுக்கு என்று தனிப்பட்ட தபாலகம் ஒன்று உண்டு அதற்கு வேண்டிய முத்திரைகளை அந்த அலுவலகமே அச்சிட்டு வெளியிடுகின்றது.

ஐ. நா வின் முக்கிய சபையாகப் பொதுச்சபை உள்ளது இதில் 159 நாடுகட்கு உறுப்புரிமையுண்டு வருடம் ஒரு முறையேனும் இச்சபை கூட்டப்படும். சில வேளைகளில் பிரத்தியேக காரணங்களுக்காக இடையிலும் கூடுவது வழக்கம். இச் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பங்கு வேண்டும்.

அடுத்து முக்கியத்துவம் பெறுவது பாதுகாப்புச்சபை இதில 15 அங்கத்துவ நாடுகளுண்டு. இதில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ்,

தொகுப்பு: **ஆர். பிரபா**

ஐ. நா சபையை வேண்டுமென்றால்' நீங்கள் வேறு இடத்துக்கு எடுத்துச்செல்லலாமே என்று அமெரிக்கா ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டது

உலகில் நடக்கும் இனப் பிரச்னையில் சிறுபான்மை இனங்கள் லட்சக்கணக்கில் அழிகின்றன. இப்பிரச்னைகள் ஐ. நா. சபைக்கு முன்னெடுத்துச் செல்லப்படும் முன்பே அவ்வினம் முற்ருக அழிந்து விடும் நிலைக்குத்தள்ளப்படுகிறது. இதற்கு முக்கிய காரணமே ஐ நா.வின் செயல்கள் யாவும் ஆமை வேகத்தில் இயங்குப்

உலகில் முக்கிய பிரச்னைகளாக இன்று உருவெடுத்திருக்கும் இனப்பிரச்னைகள் கூட இன்னும் ஐ நா, சபைக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்னும்போது அதன் செயற்பாட்டின் தன்நிறைவின்மையையே காட்டுகின்றது உதாரணமாக எதித்திரியச் சிறுபான்மைப் பிரச்னை, பிலிப்பைன்ஸ் முஸ்லிம்களின் பிரச்னை, இலங்கைத் தமிழர் பிரச்னை என்பன இன்று உலக அபிப்பிராயங்களை தன்னகத்தே கொண்ட பெரும் பிரச்னைகளாகும்.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் அழிவின் பின்பு

பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர அங்கத்துவம் பெறுகின்றன. ஏனைய பத்து நாடுகளும் காலத்துக்குக் காலம் தெரிவு செய்யப்படும். இச் சபையே உலக சமாதானத்துக்காக நாடுகளிடையெ ஏற்படும் பிரச்னைகளை ஆராயும்.

அடுத்து முக்கியத்துவம் பெறுவது சமூக பொருளாதார சபையாகும். இச் சபைக்கு 54 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் இச் சபை 2 வருடங்களுக்கு ஒரு முறை கூடும். உலகின் பொருளாதார சமூக சுகாதார நடவடிக்கைகளின் முக்கிய நோக்கங்களுக்காக இச்சபை பாடுபடும்

இதுபோல நிர்வாக சபையும அவையும் பிரதான நாடுகளில் நடக்கும் பெரும் பிரச்னைகளை ஆராய்ந்து அறிக்கையாக அவ்வப்போது பாதுகாப்புச் சபைக்கு அறிவிக்கும்.

ஐ நா. அமைப்பில் நீதித்துறைகென சர்வதேச நீதிமன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது, பாதுகாப்புச்சபையாலும், பொதுச்சபையாலும் காலத்துக்குக் காலம் கூடிதேர்ந்தெடுக்கப்

(5ம் பக்கம் பார்க்க)

## சேவாச்சிரமத்தின் குறைபாடு

மக்கள் பலர் துன்பப்படுகிறார்கள். பருத்தித் துறை முனைப்பகுதியில் தாய், மகன் (8-9-86) சூசைப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (5-10-86) பத்து மாதக் கர்ப்பிணி செல்வநாயகம் நளினி (11-10-86) ராணுவத்தின் கெடுபிடியாலும் கடலிலிருந்து தாக்கப்பட்டதாலும் இவர்கள் அகால மரணம் அடைந்துள்ளார்கள். இவர்களைப்போல் பரிதாபத்துக்குள்ளான 30 குடும்பங்களுக்கு ரூபா 5,000 நிவாரணமாகக் கடந்த போயாதினம் சேவாச்சிரமத்தில் வழங்கினோம்.

## மக்கள் கருத்து

பலருடைய துன்பங்களைத் தீர்க்க விரும்பும் எங்களுக்கு கடந்த 15 வருடகாலமாக மின்சார விநியோகம் சீராக நடைபெறுவதில்லை. இக்கருத்தை எழுதும்பொழுது மின்சாரம் நமக்கு இல்லை. பருத்தித்துறையில் பல இடங்களில் இருக்கிறது. எங்கள் துயரை யாரிடம் சொல்லியும் பயன் அளிக்கவில்லை. இந்த உதவியைச் செய்பவர்களுக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

சுவாமி சித்ரூபானந்தா,
ஸ்ரீராமகிருஷ்ணசாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை;

# இன்று ஐ. நா தினத்தை....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சபை சாசனத்தில் பாதுகாப்பு நீதி பொது நலம், மனித உரிமைகள் என்பன வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் மனித உரிமைகளை மீறும இலங்கை, ஐ. நா. சபை இம்மாதம் 24ந் திகதி உலக சமாதானத்தை எதிர்நோக்கும் ஐக்கிய நாட்டுத் தினமாக அனுஷ்டிக்கவுள்ளது. மனித உரிமைகளை பலவாறாக இலங்கை மீறியமைக்கு எதிராக 24ந் திகதியைக் கரிநாளாக அனுஷ்டிக்கவேண்டும் என சகலரையும் வேண்டுகிறோம்.

1945-ம்ஆண்டு ஜூன்மாதம் 24-ந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ஐ நா. சபை 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந் திகதியன்று முப்பது மனித உரிமை அம்சங்களைப் பிரகடனம் செய்தது.

இலங்கை 1955-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி ஐ நா சபையில் அங்கத்துவம் பெற்றது. ஆனால் இலங்கையின் முக்கிய பிரசைகளான தமிழ் மக்கள் பலவகைகளிலும் கணிப்பதற்கரியளவு சிறுபான்மையினராகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் படிப்படியாக மாற்றப்பட்டுவருகின் றனர். 1958 1977, 1983 இனக்கலவரங்களாலும், மற்றும் இராணுவ அட்டூழியங்களாலும் தமிழ் மக்களின் உயிர், உடமை, சுதந்திரம், பொது நலம் தொடர்ச்சியாகப் பறிக்கப்பட்டுவருகின்றது

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்குக்கிழக்கு மாகாணங்களில் அரசு திட்டமிட்டுச் சிங்கள மக்களைக் குடியமர்த்தி, தமிழரைச் சிறுபான்மையாக்கிவருவதுடன், அவர்களின் தொழில், பொருளாதாரத்தையும் கெடுத்துவருகிறது. இன்று தமிழ் மக்கள் நாடு இழந்து அகதிகளாகி, அகதி முகாம்களில் மிலேச்சத்தனமாக நடாத்தப்படுகின்றனர் இளைஞர், வயோதிபர் என்ற பேதமின்றி ஆண், பெண் வித்தியாசமின்றிக் கொல்லப்படுகின்றனர்; உயிருடன் தீயிடப்படுகின்றனர் சடலங்களை மிருகங்களின் தயவில்விடப்படுகின்றன. இவ்வாறு சமூதாயஒழிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது.

பயங்கரவாதச் சட்டமென்ற போர்வையில் பாரியளவில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு எதுவித குற்றங்களும் சுமத்தப்படாது காலவரையறையின்றித் தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சித்திரவதை செய்யப்படுவதுடன், அநேகர் எங்கு இருக்கின்றனரென்ற விபரங்களும் தெரிவிக்கப்படவில்லை. அநேகர் காணாமல்போய்விட்டனர்.

பல வீடுகள், வாசல்கள் தீயினாலும் குண்டுகளினாலும் அழிக்கப்படுகின்றன விளைநிலங்கள் சேதமாக்கப்பட்டு, பயிர்கள் பறிமுதல் செய்யப்பட்டும், தீயிடப்பட்டும் உள்ளன.

பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல கிராம மக்கள் விரட்டப்பட்டும், கிராமங்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. கடலில் மீன்பிடித் தொழில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இவ்வாறான நிலைமைகளைக் கொண்ட இலங்கை அரசு மனித உரிமைகளை மதிக்கும் ஐ நா சபையின் உலக சமாதானத்தை எதிர்நோக்கும் ஐக்கிய நாட்டுத் தினத்தை அனுஷ்டிக்கவுள்ளதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்?

எனவே இத்தினமான இன்று கறுப்புக்கொடிகளையும், கறுப்புப் பட்டிகளையும் உபயோகித்து இல்லங்களிலும், வாகனங்களிலும் பறக்கவிட்டு ஐக்கிய நாட்டுத் தினத்தைக் கரிநாளாக அனுஷ்டிக்க அறைகூவல் விடுக்கின்றோம். (ச-கே)


## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

செல்வி ருபிண்யா யோகநாதன்



அராலி மேற்கு கலைமகள் வீதியைச் சேர்ந்த யோகநாதன் பவானந்தி தம்பதிகளின் புதல்வி செல்வி ருபிண்யா (பிருந்தா) இன்று 24-10-86 தனது இரண்டாவது பிறந்தினத்தை கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, பாட்டி, அன்ரா, பெரியப்பா, அண்ணன்மார், அத்தை, மாமன்மார், அத்தான்மார், மச்சாள், சித்தப்பாமார். சித்திமார், அப்பம்மாமார் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (C 5375)


## உலக அமைதி...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

படும் இதில் 15 நீதிபதிகள் இருப்பார்கள். இவர்களின் பதவி நியமனங்களுக்காக 9 வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும்.

ஐ. நா. வின் கவர்ச்சிகரமான அமைப்பும், வளர்ச்சியும் உலக நாடுகளிடையே புதியதோர் மாற்றத்தைக் கொண்டு வருமென்று பரவலாக எதிர்பார்க்கப் பட்டபோதிலும் எந்தஒரு வகையிலானப் பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாமல் போனது. ஐ நா பரவலான எதிர்ப்பை மக்களிடம் சேகரித்துக்கொண்டதற்கு அடிப்படை காரணமாகும்.

இன்று இலங்கை இனப்பிரச்னை உச்சக்கட்டத்தை அடைந்து நாளும், அரசின் பாதுகாப்புப் படையினால் அப்பாவிமக்கள் அழிக்கப்பட்டு வருவதும், இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, போன்ற நாடுகள் தமது கருத்துக்களை நாளும் தெரிவித்து வருவதும், தமிழ அகதிகளுக்கு சுவிஸ்சர்லாந்து, ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகள் புகலிடம் அளித்து வருவதும் இன்னுமே ஐ நாவின் கவனத்தைத் தொடவில்லை என்னுமபோது, தமிழ் மக்கள் ஐ நா. வுக்கு எதிராகவும் கண்டனக் குரல் எழுப்ப வேண்டியவர்களாகவுள்ளனர்.

## மருத்துவபீட---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் மகஜரை ஏற்று பேச்சுவார்த்தை நடத்திய உபவேந்தர் இந்த மகஜரை பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்து ஆவன செய்வதாக உறுதியளித்தார். ஒ

# 272 தமிழ் இளைஞர்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு மாதத்துக்கு முன் லண்டனிலுள்ள மனித உரிமைகள் ஸ்தாபன அதிகாரிகளுக்குத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்த பின்பும், மீண்டும் லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் 30 பேரைக் காணவில்லையெனக் குற்றம்சாட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கை அரசு, இவர்கள் தொடர்பாக தம் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டையும் மறுத்துள்ளது.

மேலும் இலங்கை அரசு தனது சத்தியக் கூற்றுப் பத்திரத்தில் தனக்கெதிராக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்ளூர் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு சவால் விடுத்துள்ளது. (கே)

## ஈழம் தபால்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமது அறிவுறுத்தல்களுக்கு மாறாக பொதுமக்கள், அரசாங்க ஊழியர்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் முகவரிகள் பலதும் உள்ளடங்கிய 85 தபால்களை ஒன்று சேர்த்து அதனை பதிவுத்தபாலில் அனுப்ப முற்பட்டமை எமது தேசிய செயற்பாட்டை காட்டிக்கொடுக்கும் தேசத் துரோகச் செயலாகும்.

அரசாங்க நிறுவனங்களில் கடமைபுரியும் சில விசமிகள் ஸ்ரீலங்கா அரசின் ஏஜென்டுகளாகத் தொழிற்பட்டு எமது போராட்டத்தையும், போராட்டத்தின் பெறுபேறுகளையும், நம் செய்து வரும் தேசிய சேவைகளையும் காட்டிக் கொடுக்க முற்படுவதை எவ்வகையிலும் அனுமதிக்கமுடியாது

இவர்களது நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ள நாம் தவறுவோமாயின் சாதாரண ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் துணிந்து கடமையாற்ற பின்வாங்குவதோடு, எமது தொலைதூர இலட்சியங்களை அடைவதும் சாத்தியமற்றதாகிவிடும்

இக்காரணங்களினால் எம்மால் கைது செய்யப்பட்டிருக்கும் யாழ் தபாலக உயரதிகாரியை நாம் தீவிர விசாரணைக்குட்படுத்த வேண்டியுள்ளது. (ஒ)

## புலிகளின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது அதன் பின்னர் கடந்த வாரம் முதல் இவ் வானொலி செயல்படத் தொடங்கியுள்ளது. ஞாயிறு பகல் 11 மணி முதல் 12 மணி வரையும், புதன் இரவு 9 மணி முதல் 10 மணி வரையும் இச் சேவை தமிழில் இடம்பெறுகிறது. பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் இவ் வானொலியை தெளிவாக கேட்கக் கூடியதாகவுள்ளது.

இதே சமயம் ''விடுதலைப் புலிகளின் குரல்'' பிரான்ஸ் வானொலி ஞாயிறு, வியாழன் இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரையும் இடம் பெறுகிறது. (மா)

## 7ம் ஆண்டு பரீட்சை நிலையம் இடமாற்றம்

யாழப்பாணம், வெளி பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி ஷெல் அடிக்கப்படுவதினால் பருத்தித்துறை மெதடிஸ் பாடசாலையில் நடைபெறவிருந்த 7ம் ஆண்டுக்கான பிரவேசப் பரீட்சை அங்கு நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலையில் நடைபெறவிருந்த பிரவேசப் பரீட்சை புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையில் நாளை சனிக்கிழமை காலை நடைபெறும். (ச)


## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

Usha குளிர்சாதனப் பெட்டி ஒன்று நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிற்றி சொப் 18/2, விதானையார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (C 5376)

புதிய வெளியீடு
வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பழிக்குப்பழி வாங்கும். திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

லிடோ
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கனி
நியாயம்

எமது இன்றைய
புதிய வெளியீடு
ரஜனிகாந் — ராதிகா நடித்த
வாழ்க்கைப் போராட்டம்
[சிறந்த பிரதி]
வீடியோ பிரசாத்
இல. 424, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[C-2818]

மிது வீடியோ மூவீசாரின்
இன்றைய புதிய வெளியீடு
ரஜனிகாந், ராதிகா, சரத்பாபு, ஊர்வசி
நடித்த
வாழ்க்கையின் போராட்டம்
[தரமான பிரதி]
பல புதிய திரைப்படங்களை
தீபாவளி வெளியீடாக எதிர்பாருங்கள்
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A-3004]

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
தீபாவளி விளையாட்டு விழா
போட்டிகள்:
1. ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி -20 மைல்கள்.
2. பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி -17 மைல்கள்.
3. வேகநடைப் போட்டி - 50 வயதுக்கு மேற்பட்டோர் - 1 மைல்.
4. வேகநடைப் போட்டி - 50 வயதுக்கு உட்பட்டோர்- 2½ மைல்கள்.
காலம்:
1986-11-01-ந் திகதி, சனிக்கிழமை -மு ப. 7 மணி தொடக்கம்.
தகைமை:
1. தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் 1986-10-15-ந் திகதிக்கு நேர்முந்தி ஆகக் குறைந்தது ஒரு வருடகாலம் வசித்திருக்க வேண்டும்.
2. சைக்கிள் ஓட்டப் போட்டிகளுக்கு- வயதுக் கட்டுப்பாடு இல்லை
3. ஸ்ராண்டட் அளவுச் சைக்கிள் மாத்திரம் - அனுமதிக்கப்படும்.
4. பிரவேசப் பணம் ரூ 10/- செலுத்த வேண்டும்.
பரிசுகள்:
1. ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி:
1-ம் பரிசு: சிங்கர் சைக்கிள்
2-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்.
3-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்.
2. பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி:
1-ம் பரிசு: சிங்கர் தையல் இயந்திரம்.
2-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்.
3-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்.
3. வேகநடைப் போட்டிகள் இரண்டிலும் பரிசு பெறுவோருக்கு பாட்டா பாதணிப் பொதிகள்.
விண்ணப்பித்தல்:
சாவகச்சேரி நவீன சந்தை 'விமலாஸ்' ஸ்தாபனத்தில் 1986-10-30-ந் திகதி நண்பகலுக்கு முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் மேல் விபரங்களை அங்கு பெற்றுக் கொள்ளலாம்.
லயன் டாக்டர் பே. பிலிப்.
தலைவர்,
சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.
சாவகச்சேரி,
1986-10-22.
(C 5374)

### எந்த இடர்வரினும்

# தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னேறவேண்டும்

கிளிநொச்சி, வியா

"தமிழ் மாணவர்கள் எந்த இடர்வரினும் கல்வியில் முன்னேற்றம் காண முயலவேண்டும் பலவழிகளிலும் பின்னேக்கியுள்ள கிளிநொச்சி மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்காக பலவித சேவைத் திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம் இந்த வகையில் இன்று திறக்கப்படும் பொது நூலகம் ஒன்றாக அமைகிறது

இவ்வாறு கிளிநொச்சி ஜெயந்தி நகரில் நடைபெற்ற பொது நூலகத் திறப்பு விழாவிலும் இந்து மாமன்ற பரிசளிப்பு விழாவிலும் மன்றசஞ்சிகையான மருதமலை வெளியீட்டு விழாவிலும் உரையாற்றுகையில் ரோட்டரிக்கழக பிரமுகரும் பொது நூலக ஸ்தாபகருமான சமூக சேவையாளர் ஆசிரியர் எட்வேட் மரியதாசன் கூறினர்.

விஞ்ஞானக் கல்வி நிலைய அதிபர் திரு எம். ஏ கனகசிங்கம் தலைமையில் பிரஸ்தாப கல்வி நிலையத்தில் இவ்வைபவங்கள் ஒருங்கே நடைபெற்றது.

பிரதம விருந்தினராக உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் திரு. கா. நாகலிங்கம் தம்பதிகள் கலந்துகொண்டனர். வரவேற்புரையை ஆசிரியர் திரு தேவேந்திரன் நிகழ்த்தினர்.

சைவப்புலவர் திரு மகாலிங்கம், ஆசிரியர் திரு சிசம்பு, குருகுல அதிபர். கே கதிரவேலு. திரு. பி. கணேசபிள்ளை, எஸ் தனபாலசிங்கம் உட்பட மருதமலை சஞ்சிகை ஆசிரியர்கள் முதலனேரும் உரையாற்றினர்கள்

---

# சுயதொழில் வேலைவாய்ப்பு முக்கிய இடம்பெறும்

கிளிநொச்சி, வியா

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் யுவதிகளின் நல்வாழ்வுகருதி பலவித சேவைத்திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகிறது.

பெண்கள் நடமாடும்பயிற்சி நிலையங்கள் விளையாட்டுப் பயிற்சி பலவித போட்டிகள் முதலானவற்றை இந்த நோக்கில் நடாத்திவருகின்றனர்

இவ்வாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் பரந்தனில் நடத்தப்பட்ட நிருபர்கள் மகாநாட்டில் உரையாற்றுகையில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ் தர்மசீலன் கூறினர்

இம் மகாநாட்டில் கிளிநொச்சி இளைஞர்கள் சேவை அதிகாரி பி. பரராஜசேகரப்பிள்ளை இளைஞர் சேவையதிகாரி செல்வி. வல்லிபுரம் விமலாதேவி, பூநகரி இளைஞர் சேவையதிகாரி எஸ் சிவதட்சணமூர்த்தி ஆகியோரும் மாவட்ட இளைஞர் சம்மேளனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் சுயதொழில் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதாகவும் தமிழ் கலை கலாசாரம் வளர இளைஞர் சேவை மன்றநிதிகளைப் பயன்படுத்தி பாடுபடப் போவதாகவும் மாவட்ட இளைஞர் சேவையதிகாரி திரு தர்மசீலன் இம் மாநாட்டிற் தெரிவித்தார்.

---

## சிறுவர்களுக்கு பரிசு

சுழிபுரம், வியா

பஞ்சபுராணம், இடர்களையும் பதிகம், கந்தரநுபூதி, அபிராமி யந்தாதி ஆகியவற்றை மனனம் செய்த நூற்றிநாற்பத்தெட்டு சிறுவர்களுக்கு சுழிபுரம் கூடபனையினரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

மனனம் செய்தவர்களுக்குரிய பரிசுகளை பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா வழங்கினர் ஆலய பரிபாலன சபைத்தலைவர்திரு சி அப்புத்துரை தலைமையில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது

டாக்டர் கே சிவராசா வரவேற்புரை நிகழ்த்தினர் ஆசிரியர் கே. நடராசா. திரு ஆ. அருள்துரை, புலவர் சு. சுந்தரம்பிள்ளை, திரு. க வாமதேவன் ஆகியோர் ஆசியுரை கூறினர். [எ]

---

## 70 பேர் விடுதலை

மட்டக்களப்பு வியா

இராணுவத்தால் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட 98 பேரில் 70 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 28 பேர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக கூறப்படுகிறது. [சி]

---

### கிளிநொச்சி பாடசாலைகளில்

# மாணவர்கள் வரவு பெரும் வீழ்ச்சி

கிளிநொச்சி, வியா

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் வரவு பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

சுமார் ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி பயின்று வந்த புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் மாணவிகளின் சராசரி வரவு நாளாந்தம் 200க்கு குறைவாகவே உள்ளது.

இராணுவ முகாமிற்கு அருகில் இருந்து மூடப்பட்ட கனிஷ்ட மகாவித்தியாலயம் கரடிப்போக்கில் உள்ள புனித திரேசாள் மகளிர் கல்லூரி மண்டபம் ஒன்றில் தற்போது நடத்தப்பட்டுவருகிறது. இப்பாடசாலையில் முன்பு சுமார் 1500 மாணவர் வரை கல்வி பயின்று வந்தனர். இப்பாடசாலையில் தற்போது மாணவர் வரவு நாளாந்தம் 200 வரையிலே உள்ளது.

இப்பாடசாலைகள் போலே மகாவித்தியாலயம், கனகபுரம் அரசினர் பாடசாலை முதலானவற்றிலும் மாணவர் வரவு குறைவாகக் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ அசம்பாவிதங்களுக்கு அஞ்சி கிளிநொச்சி நகரில் வசித்து வந்த அனைவரும் இடம்பெயர்ந்துள்ளதாலேயே மாணவர் வரவிலும் நகரப்புறப் பாடசாலைகளில் மந்தநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

# "மாகாணசபை யோசனைகள் இனப்பிரச்னைக்குத் தீர்வாகாது"

## வ. மா. ஆ. சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்

"தேசிய இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசியற் தீர்வு காணப்படவேண்டுமென சர்வதேச ரீதியிலான வற்புறுத்தல் ஏற்பட்டுள்ள பொழுதும் அரசாங்கம் அரசியற்தீர்வு காண்பதற்குப்பதிலாக இராணுவத் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது."

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளையான வடமாகாண ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு டி. புவனேந்திரராசா தலைமை வகித்தார். அங்கு நிறைவேற்றப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

★ வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும். தமிழர் பிரதேசத்தின் முழுமை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். முஸ்லிம் மக்களுக்குரிய தமது எதிர்காலத்தைப்பற்றித் தீர்மானிக்கும் உரிமை வழங்கப்படவேண்டும்.

★ இன்று சர்வதேசப்பிரச்சனையாக பரிணமித்துவரும் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் போராடிவரும் இளைஞர் அமைப்புக்களுடன் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமென இச்சபை கருதுகிறது.

★ அரசு முன்வைத்துள்ள மாகாணசபைகள் அமைப்பு முறை இனப்பிரச்னைக்குத் தீர்வாக முடியாதென்ற எமது சங்கத்தின் நிலைப்பாட்டை நாம் மீண்டும் உறுதி செய்கிறோம்.

★ தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

★ இனப்பிரச்னையைப் பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்நாட்டில் தனக்கு சாதகமான இராணுவ ஆட்சியொன்றை ஏற்படுத்த முற்பட்டுள்ளது. இவ்வேளையில் தென்னிலங்கையில் உள்ள முற்போக்குச்சக்திகளும், தொழிலாளவர்க்கமும் தேசியஇனங்களின் சமத்துவத்தை ஏற்று இவ்வரசின் பாசிச நடவடிக்கைகளை எதிர்த்து ஐக்கியப்பட்ட போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டும். இலங்கை ஆசிரிய சங்கம் இதற்கான முன்முயற்சியில் ஈடுபடவேண்டுமென இச்சபை கோருகிறது

★ தயாரத்தின சம்பளக் கமிஷன் அறிக்கையை முழுமையாக பகிரங்கப்படுத்த வேண்டுமென கோருகிறோம்.

★ பட்டதாரி ஆசிரியர்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளன சம்பளவேறுபாடுகள் களையப்பட்டு அனைத்துபட்டதாரி ஆசிரியர்கட்கும் ஒரே சம்பளத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோருகிறோம். (வா)

---

## எரிபொருள் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, வியா

முல்லைத்தீவ மாவட்டத்தில் தற்பொழுது நெல் விதைக்கும் காலம் ஆரம்பமாகியிருப்பதனல் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது

1 லீட்டர் டீசல் தனியார் கடைகளில் 12-50க்கு விற்பனை செய்யப்படுகின்றது எனினும் டீசல் பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாகவேயுள்ளது.

மன்னர், வவனியா சம்பவங்களினல் வவனியாப் பகுதியிலிருந்து டீசல் வருவதில் தடையேற்பட்டுள்ளது டீசல் வாங்குவதற்கு இராணுவத்திடமிருந்து அனுமதிப் பத்திரம் பெறவேண்டியுள்ளதாலேயே இந்தச் சிரமமேற்பட்டுள்ளது. [கே]

---

# இன்றைய பலன்

மாதம்- ஐப்பசி
திகதி 7 (24-10-1986)
கிழமை- வெள்ளி
திதி- ஷஷ்டி மு. ப. 10-48ன் மேல் ஸப்தமி
நஷத்திரம்- திருவாதிரை பி. ப 1-38ன் மேல் புனர்பூசம்

மேடம்- கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறையும். தொழில் லாபமுமுண்டு.

இடபம்- தடுமாறறநிலை தோன்றும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம்

மிதுனம்- அன்னியர்மூலம் பகைகள் உருவாகலாம். செய்தொழிலில் நஷ்டமுண்டாம் போக்குவரத்து விடயத்தில் அவதானம் வேண்டும்.

சடகம்- வாக்குப் பலத்தால் காரியத்தைச் சாதிப்பீர்கள். சௌஸ்திர சுகமுமுண்டு. நீண்டநாள் பிணியும் அகலும்.

சிங்கம்- குடும்பக்கவலை தலைதூக்கும் வரவில் மிஞ்சிய செலவுமுண்டு. மாணவர்கள் அவதானம் வேண்டும்.

கன்னி- தாய்வழிப் பொருள் வரவுமுண்டு தரமான வாழ்வுமுண்டு தன்தொழில் விருத்தியுண்டு.

துலாம்- அறவழி மனம் நாடும். அறிஞர்கள்மூலம் புதிய பாதை திறக்கும். பொதுத்துறையிலும் நன்மை கிட்டும்

விருச்சிகம்- சத்துருவாய் கேடு மனதில் அமைதி குன்றும். பணவிரையமும் உண்டாம். நிதானம் நன்று

தனுசு- காதலர் வாழ்வும் மலரும். கன்னியர் வாழ்வும் சிறக்கும். கடமையிலும் நன்மை பிறக்கும்

மகரம்- தொழில் மந்தநிலை கடன் தொல்லைகள் அதிகரிக்கும் எதிலும் விரக்திநிலை தோன்றும்.

கும்பம்- பிதாவழிப் பெருமையுண்டு கால்நடை விருத்திக்கிடமுண்டு குடும்பத்திலும் சுமுகமான நிலை தோன்றும்

[7ம் பக்கம் பார்க்க]

---

### பேராசிரியர் குமாரவடிவேல் வீட்டுக் கொள்ளை:

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் குமாரவடிவேல் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இக் கொள்ளைச்சம்பவம் சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது அங்கத்தவர்களுள் ஒருவரான பேராசிரியர் குமாரவடிவேல் வீட்டில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றது நாட்டின் சூழ்நிலையைக் காரணங்காட்டிப் பல அறிஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறியமை நாமறிந்ததே ஆயினும் சேவை உணர்வுடன் எஞ்சியிருக்கும் ஒருசிலர் கூட இத்தகைய அத்துமீறிய செயல்களினல் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்படுவதை உணரக் கூடியதாகவுள்ளது. எனவே சமூகநலன்கருதி இத்தகைய செயல்கள் இனிமேலும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டியது எம்மனைவரினதும் பொறுப்பும், கடமையும் ஆகும். குறிப்பாக விடுதலை தாபனங்கள் இவ்விடயங்களில் அதிக அக்கறை எடுத்து தொடர்ந்தும் இத்தகைய ஈனச்செயல்கள் இடம்பெறாது தடுக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்" (மா)

---


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்
எமது முகவர் அழைத்துச் செல்கிறார்.
உடனடியாக
எமது காரியாலயத்தில் தொடர்புகொண்டு
பிரயாணத்திற்கு ஆயத்தமாகுங்கள்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Railway underground general workers
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள்
21 நாளில் செய்து கொடுக்கப்படும்
சவுதி, குவைற் - கிளீனேர்ஸ். சாரதிகள்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள்
உடன் செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC TRAVELS

(அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A 2813]

## வவனியா தடைமுகாமுக்கருகே சிங்களவருக்கு சொந்தமான வாகனம் கடத்தல்

வவனியா வியா.

சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒருவருடையவாகனம் கடந்தசனிக்கிழமை வவனியா புகையிரத நிலைய வீதியில் வைத்து கடத்தி செல்லப்பட்டுள்ளது.

வெளியிடத்திலிருந்து நெல்லு ஏற்றி வந்த இவ் வாகனம் மேற்படி வீதியில் உள்ள ஒரு ஆரிசி ஆலைக்கு நெல்லு இறக்க சென்ற சமயம் ஆயுதபாணியான மூவரினுல் சாரதி, கிளினருடன் கடத்தப்பட்ட இந்த லொறியில் 105 மூடை நெல்லு இருந்தது

சாரதியும் கிளினரும் கடத்தப்பட்ட சில மணித்தியாலயங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

வவனியா புகையிரத நிலைய வீதி பொலிஸ் தடை முகாமிற்கு அருகாமையிலேயே இச் சம்பவம் நடந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## முதலுதவி, தையல் பயிற்சிகள்: பெண்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமையும்

பண்டத்தரிப்பு, வியாழன்

''இன்றைய காலகட்டத்தில் பெண்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வு அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும் ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் தொகை அதிகரித்து வருவதால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளும் அதிகரித்துள்ளன எனவே இது போன்ற பயிற்சி நிலையங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தொண்டாற்றி வருவது ஒரு முன்மாதிரியான செயலாகும் ''

இவ்வாறு அச்சுவேலி கார்மல் அன்பக தலைமைத்துவ பயிற்சி நிலயத்தின் வருடாந்தக் கண்காட்சியிலும் போட்டிகளிலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் செஞ் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

நிலைய அதிபர் அருட்சகோதரி செபஸ்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில். இந்த நிலயத்தில் யுவதிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் தையல்பயிற்சி, பன்னவேலைப் பயிற்சி முதலுதவிப்பயிற்சி ஆகிய பல்வேறு பயிற்சிகள் அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்குப் பெரும் உறுதுணையாக இருக்கும் என்றும் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த வழி ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

பயிற்சிபெற்ற யுவதிகளின் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய கண்காட்சியும் நடைபெற்றது போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி ஜெயவிதா இன்னாசித்தம்பி வழங்கினர்.

## வீட்டுக்காரர் நித்திரை; திருடர்கள் கைவரிசை

உடுவில், புதன்

வீட்டுக்காரர்கள் நித்திரையிலிருந்த சமயம் திருடர்கள் உட்புகுந்து பணம், கைக்கடிகாரங்கள் போன்ற பொருட்களைக் களவெடுத்துச்சென்ற சம்பவமொன்று உடுவில் கிழக்கைச் சேர்ந்த வன்னித்தம்பி இரத்தினசிங்கம் என்பவரின் வீட்டில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வன்னித்தம்பி இரத்தினசிங்கம் என்பவர் சம்பவம் நடைபெற்ற இரவு அச்செழு அம்மன் கோவிலில் நடைபெற்ற விலுப்பாட்டு நிகழ்ச்சிக்கு கார் ஓட்டிச்சென்று விட்டு நள்ளிரவு வீடு திரும்பியதாகவும் அதன்பின் நல்ல தூக்கத்திலிருந்த சமயவும் இக்களவு நடைபெற்றதாகவும் கூறினார்

பணப்பட்டி வேலிக்கரையில் திறந்தநிலையில் காணப்பட்டதாகவும் அதனுள் இருந்த சில்லறைப் பணத்தினை விட்டு, தாள்காசுகளை மட்டும் களவாடிச் சென்றதாகவும் திரு. இரத்தினசிங்கம்கூறினார்

உடுவில் கிழக்கு பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்களும், கொள்ளையும் நடைபெற்று வருவதுகுறிப்பிடத்தக்கது. [வா]

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் நோயாளர் அதிகரிப்பு

மாவிட்டபுரம் வியா

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு கடந்த சில தினங்களாக ஏராளமான நோயாளர்கள் வருவதால் வார்ட்டுகளிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் 'ஷெல்' தாக்குதலைக் கண்டித்து மேற்கொள்ளப்பட்டுள்ள போராட்டம் காரணமாக யாழ். குடாநாடடின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான நோயாளர்கள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

நோயாளர் தொகை பெருகியுள்ள போதும் வைத்திய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அயராத சேவையால் நோயாளர்களுக்கு வேண்டிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

வார்ட்டுகளில் அனுமதிக்கப்படுவோரின் தொகையும் அதிகரித்துள்ளதால் வார்ட்டுகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பிரஜைகள் குழு நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டிக்கரை பிரஜைகள் குழுவின் பொதுக்கூட்டம் திருப்பூர் ஒன்றிய சுகாதார நிலையத் தலைவர் திரு. க. தங்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற சமயம் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

இணைச்செயலாளர்கள் திருவாளர்கள் க. தங்கலிங்கம், து மு சிவபாதம். பொருளாளர் திரு ஞா. பரமானந்தம். 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (வா)

## தமிழர் கலாசார அவையின் கவின் கலை அரங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி.

தமிழர் கலாசார அவை நடாத்தும் கவின்கலை நிகழ்சிகள் நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை பிறபகல் யாழ். வின்ஸர் கலை அரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் பாரதியின் கனவுகள் இன்றைய நம்நாட்டுச் சூழ்நிலையில் நனவுகள் ஆகினவா? ஆகவில்லையா எனும் தலைப்பில் திரு. இ ஜெயராஜ் தலைமையில் நடைபெறும்.

நனவுகள் ஆகினஎனும் சார்பில் கலாநிதி நா. சுபபிரமணியன், திருமதி பத்மா சோமகாந்தன், திரு. கனகசபாபதி நாகேஸ்வரன், திரு வி. ரி. சிவகுமாரன் ஆகியோர் பேசுவார்கள்.

நனவுகள் ஆகவில்லை என கவிஞர் சேர. பத்மநாதன், திருமதி வள்ளிநாயகி, இராமலிங்கம், திரு ரி நந்தகுமார். திரு க குமாரதாசன், ஆகியோர் பேசுவார்கள்

இதனை தொடர்ந்து பத்து இளம் வீணை வித்தகிகள் இணைந்து நடாத்தும் 'நச வீணை இசை' நிகழ்ச்சியும் திரு. ரி லோகராஜா நடாத்தும் 'நவரசக்குரல' நிகழ்ச்சியும் நடைபெறும். (சி)

### முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்

திரு. சி. சிதம்பரப் பிள்ளை சதாசிவம்

[இளைப்பாறிய புகையிரத பகுதி தலைமைப் பாது காவலர்]

மலர்வு: 1925-7-19

உதிர்வு: 1985 11-3

திதி: 1986-10-24

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எங்களை அன்புடனும், பாசத்துடனும் தங்களின் கண்ணின் மணி போல் வாழவைத்துவரும் வேளையில், உலகையே ஒளிர வைக்கும் மின் இணைப்பானது, மின்னுமல் முழங்காமல் திடீரென ஆறுத்துயரில் ஆழ்த்தி, எம்மையெல்லாம் தவிக்க விட்டு, பிரிந்து செல்ல வைத்து ஓராண்டு சென்றாலும், உங்கள் திருவுருவ நிழல் எங்கள் கண் முன் தினமும் நடமாடிக் கொண்டேயிருக்கின்றது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், அன்புப் பேரன் வித்தகக்குமரன்.

சாந்தா வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

[C 5373]

## கத்தோலிக்க— கலை—இலக்கிய வட்டம் யாழ்நகரில் உதயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கத்தோலிக்க இலக்கிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்கள் சமுதாய சேவைகளைப் பாராட்டி விழா எடுக்கவும், கத்தோலிக்க கன்னிப் படைப்பாளர்களை வெளிக்கொணரவும் ''கத்தோலிக்க கலை இலக்கியவட்டம்'' என்ற புதிய இலக்கிய அமைப்பு அண்மையில் யாழ். நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

இவ்விலக்கியவட்டத்தின் இணைச்செயலாளர் எட்வர்ட் லியோன், இவ்விலக்கியவட்டம் கத்தோலிக்கரல்லாத பிறமத, இலக்கிய கர்த்தாக்களையும் கௌரவித்துச் செயல்படும் எனத் தெரிவித்தார்

இவ்இலக்கியவட்டத்தின் உத்தியோகத்தர் விபரம்: போஷகர் டாக்டர் ஜே பி வி பிலிப்ஸ், தலைவர் துரை ஆரோக்கியதாசன், உபதலைவர் பா. அமிர்தநாயகம் செயலாளர் ஜே சப்பாலா, இணைச்செயலர் எட்வர்ட் லியோன், பொருளாளர் எம் ஏ. இரத்தினலிங்கம் மற்றும் ஏழு பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

## வவனியா வர்த்தகர் விடுதலை

வவனியா, வியாழன்

இனம் தெரியாதவர்களினுல அண்மையில் கடத்தப்பட்ட வவனியா வர்த்தகர் திருஞானசம்பந்தர் பதினொரு தினங்களின்பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹொறவப்பொத்தானை வீதியில் உள்ள இவரது இல்லத்தில் வைத்து மேற்படி வர்த்தகர் ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். (ஒ)

## இன்றைய பலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்- அன்னிய வாசம் உண்டு. ஆசாரசுமுமுண்டு. குடும்பத்திலும் சுபகருமம் இடம்பெறும்.

திருமலை வே. ரவீந்திரன்

## வெள்ளைப் பிரம்பு தினவிழா

யாழப்பாணம். வெள்ளி

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் அச்சுவேலி லயன்ஸ்கழக ஆதரவுடன் நாளை சனிக்கிழமை அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் பிரதமஅதிதியாகக் கலந்து கொள்வார்.

அன்பளிப்புக்கான,

''சங்கு மார்க்'' எவர் சில்வர்ப் பாத்திரங்களுக்கு தவறாது நாடுங்கள்

செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

இல. 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(நடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)

(A 2816)

பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புகள் உண்டு. Cleaners, house boys, Gardners, House drivers, house Cook Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-

N. Bala

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

பஸ் இல. 764.
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-2817]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 24-10-86

# "மின்பாவனையாளர் நிலுவையை உடன் செலுத்தவேண்டும்" - அரச அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை இலங்கை மின்சார சபைக்கு 350 லட்சம் ரூபாவை உடனடியாகச் செலுத்தவேண்டிய நெருக்கடியில் உள்ளதால் மின் பாவனையாளர்கள் நிலுவைப் பணங்களை உடனடியாகச் செலுத்தும்படி யாழ். அரசாங்க அதிபரும், யாழ். அபிவிருத்திச்சபைச் செயலாளருமான திரு எம். பஞ்சலிங்கம் மின் பாவனையாளர்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு மேல் மின் கட்டணங்களைச் செலுத்தாமல் உள்ள பாவனையாளர்களுக்கு 'சிவப்பு அறிவித்தல்' வழங்கப்படும் என்றும் இவ்வறிவித்தல் வழங்கப்பட்ட பின் இரு நாட்களுக்குள் நிலுவையைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக நிலுவையில் பத்து வீதம் மேலதிக பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மின்பாவனையாளர்கள் தமது நிலுவைகளை தத்தமது யாழ் அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு செலுத்தும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ச-கே)

## மாணவர் கூட்டமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சிறைக்கைதிகளுக்கு ஆதரவாக போராட்டங்களை விஸ்தரிப்பது தொடர்பாக யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கான தற்காலிக கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் சனசமூக நிலையங்களுக்கான அமைப்புக் கூட்டத் திகதி தீர்மானிக்கப்பட்டு குறிக்கப்பட்ட திகதியில் நடைபெற இருந்த கூட்டங்களில் தவிர்க்கமுடியாத காரணங்களால் எமது பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியவில்லை

இவ்வாறு 'மாணவர் அமைப்புக்களின் கூட்டமைப்பு' நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இச்சனசமூக நிலையங்களுக்கான கூட்டங்களைப்பிறிதொரு தினத்தில் நடத்த மாணவர் அமைப்பு முடிவுசெய்துள்ளது (ஒ)

## மூன்று தினங்களாக பருத்தித்துறையில் இராணுவம் 'ஷெல் தாக்குதல் மூன்று இளைஞர் படுகாயம்

[பருத்தித்துறை நிருபர்]

பருத்தித்துறை கூட்டு இராணுவ முகாமிலிருந்து கடந்தமூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் மோட்டார் ஷெல் தாக்குதல்களால் மூன்று இளைஞர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலையிலிருந்து நடைபெற்ற மோட்டார் ஷெல் தாக்குதல்களினால் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். ஐயர் [வயது 25] எஸ் கடாபி [வயது 22] என்ற இரு இளைஞர்களும் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சையின் பின் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மோட்டார் ஷெல் தாக்குதல்களின்போது எஸ் பரதன் (வயது 24) என்ற இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். [கே]

## உதைபந்தாட்டம்: இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி,

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

மூன்று பிரிவுகளுக்கு மிடையில நடைபெறும் இம்மோதலின் முதல் ஆட்டம் பி. ப. 2-30மணிக்கு ஆரம்பமாகும். (வி)

## மரண அறிவித்தல்

### சின்னையா செல்லத்துரை

ஆனைப்பந்தி சலூன் உரிமையாளர் சின்னையா செல்லத்துரை காலமாகி விட்டார். இவர் மல்லிகா தேவியின் அன்புக் கணவரும், தயாநிதி (மே ஜெர்மனி), ஜெயாநிதி உதயகுமார் (மே. ஜெர்மனி), சாந்தகுமார், செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாள்ஸ் பற்றிக்சின் (மே ஜெர்மனி) மாமனாரும், ஜோன்சனின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லூர் செட்டித் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து 24-10-86 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(C 5369) குடும்பத்தினர்.

### குமாரசிங்கம் வல்லிபுரநாதன்

குமாரசிங்கம் வல்லிபுரநாதன் காலமானார். (இளைப்பாறிய உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம், மானிப்பாய்) இவர் குணமணியின் அன்புக் கணவரும், ஜமுனா (உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி), வின் அன்புத் தந்தையும், திருமதி குமாரசிங்கத்தின் சிரேஷ்ட புத்திரனும் (கோண்டாவில்), குருநாதன், நல்லைநாதன், ஜதார்த்தநாதன் கமலாதேவி, திருமதி சரோஜினிதேவி கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரரும் ஊரெழு தம்பையாவின் மருமகனும், சிவம், திருமதி தவமணி கந்தசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவர் 22-10-86 புதன்கிழமை காலமானார். ஈமக்கிரியை பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

பொக்கணை வீதி, ஊரெழு.

(C 5377)

### திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம்

திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்றசுப்பிரமணியத்தின் (கணக்காளர், புகையிரத திணைக்களம்) அன்பு மனைவியும், பேராசிரியர் V. சிவலிங்கம், காலஞ்சென்ற V இராசரத்தினம் (Surveyor General) ஆகியோரின் அன்புச்சகோதரியும், சுபத்திரா, சுமித்திரா, சிறீகாந்தா, சாரதா, சரோஜா, மாணிக்கவாசகர், சாந்திக்குமார் ஆகியோரின் அன்புத்தாயாரும் குணசிங்கம், பத்மநாதன், சந்திரா, கொல்சன், சந்திரலேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், கீதாஞ்சலி, இரவீந்திரன், வதனி, கௌசிகன், சிறீஸ்கந்தராசா, சிறீ கிருஷ்ணராசா, சமந், துவினு ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (25-10-86) காலை 10-00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. குணசிங்கம்.
23, நாலாம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்.

(C 5378)

## உயிரைப்---

[1ம் பக்க தொடர்ச்சி]

வேண்டியுள்ளது. பதற்றம் எமது கல்வியைப்பாதிக்கிறது. இத்தகைய நிலையை நீக்குமுகமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக 'மருத்துவ மாணவர்கள் ஒன்றியம்' பல்கலைக்கழகமானியக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கூறப்பட்டுள்ளது. இம்மகஜரில் மேலும் கூறப்படுள்ளதாவது:-

''கடந்த மாதம் 6-ம் திகதியும், இம்மாதம் 11-ம் திகதியும் ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதில் சிறுவர் சிகிச்சை நிலையமும், மேகநோய் சிகிச்சைப் பிரிவும் சேதமடைந்தன. ஆயினும் அதிர்ஷ்டவசமாக இந்த ஷெல் தாக்குதல் மருத்துவ மாணவர்கள் அங்கு இல்லாதபோதும், சிகிச்சைநேரமற்றவேளையிலும் நடத்தப்பட்டதாலும் யாரும் காயப்படவோ உயிரிழக்கவோ இல்லை கட்டிடங்களுக்கும் உபகரணங்களுக்கும் மட்டுமே சேதமேற்பட்டது.

''ஷெல் தாக்குதல்களினால் நோயாளிகளின் வருகை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது அத்துடன் தாதிமார், வைத்தியர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் பதற்றத்துடனும் பயத்துடனும் வேலை செய்கின்றனர் கண்மூடித்தனமான ஷெல்தாக்குதல் மேலும் தொடருமானால் ஆஸ்பத்திரியின் சாதாரண இயக்கங்கள் ஸ்தம்பிதமடையலாம்.''

''மேற்கூறியபிரச்னைகளை நீங்கள் கவனத்தில் கொண்டு இவற்றைநிவர்த்திக்கத்தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.''

இம்மகஜரின் பிரதிகள் போதனா வைத்தியசாலைகள் அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்க, கொழும்பு, பேராதனை, ருகுண பல்கலைக்கழகங்களின் மருத்துவப்பீடத் தலைவர்கள், மாணவர் ஒன்றியங்கள் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன (ஊ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126

## அடம்பனில் தொடர்ந்தும் புலிகள் ராணுவம் பயங்கர மோதல்

(நமது நிருபர்)

மன்னார் அடம்பன் பகுதியில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் போராளிகளுக்கும் நேரடிச் சமர் மும்மரமாக நடைபெற்றுவருகிறது.

ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும், இரு குண்டுவீச்சு விமானங்களிலிருந்து குண்டுகளும் சரமாரியாகப் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன.

தள்ளாடி இராணுவமுகாம். மன்னார் கோட்டை முகாம் ஆகியவற்றிலிருந்து இராணுவத்தினர் வெளியேறுதவாறு விடுதலைப்புலிகள் சென்றிகளை போட்டுள்ளனர்.

ஏற்கனவே அடம்பன் காட்டுப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்துவதில் 650க்கு மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் தேடுதலில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகளின் போராளிகள் தாக்கிவருவதைத்தொடர்ந்து கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் 12ம் திகதி அடம்பனில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் பெற்ற பெரும் வெற்றிக்குப் பழிவாங்கும் நோக்கமாகவே கடந்த 21ம் திகதி தொடக்கம் பெருந்தொகையான இராணுவத்தினர் நேடுதல் வேட்டையில் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிஷயம் எப்படி இருந்தபோதிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருந்தும் ஹெலிகொப்டர், இரு குண்டுவீச்சு விமானங்கள் ஆகியவற்றின் பலத்த தாக்குதலுக்கும் மத்தியிலும் விடுதலைப்புலிகள் இராணுலத்தினருடன் எதிர்த்தாக்குதல் தொடுத்துவருவதாகக் கூறப்படுகிறது. (மா)

## 40 வருடங்களின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹென்றிஸ், கொக்குவில் இந்து, யாழ் சென். பற்றிக்ஸ் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா, தெல்லிப்பழை மகாஜனா, யாழ் கனகரத்தினம், யாழ. மத்திய கல்லூரி, யாழ் சென் ஜோன்ஸ், நீர்வேலி அத்தியார் இந்து, சரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

### பிரிவு 'பி'

சுழிபுரம் விக்டோரியா, நெல்லியடி ம. வி. வட்டுக்கோட்டை இந்து, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, அளவெட்டி அருணோதயா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி, சாவகச்சேரி இந்து, மானிப்பாய் மெமோறியல். காங்கேசன்துறைநடேஸ்வரா, யாழ்ப்பாணம் ஒஸ்மானியா.

முதல்போட்டி நாளை 25ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் 'ஏ' பிரிவில் மகாஜனாகல்லூரியை எதிர்த்து யாழ் கனகரத்தினம் ம ம. வி மோதுகின்றது (வி)

## விசேஷ ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, வியாழன்

விசேஷ ஜனாதிபதி விசாரணைக்குழு திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றம் இன்று நிறைவேற்றியது

இச்சட்ட மூலம் குறித்து பாராளுமன்றத்தில உரையாற்றிய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் கொள்கைகளையும் பேணிப்பாதுகாப்பதே இச் சட்டமூலத்தின் குறிக்கோள் என்றும் அதன் மூலம் உறுப்பினர்கள் எவ்வித அச்சமுமின்றி எமது பணியை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினார்.

விசேஷ ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு தண்டனை விதிக்கும் அதிகாரமும் உண்டு என்று கூறிய அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்கள் விசேஷ மாகாணசபைகள் ஏற்படுத்தும் சட்ட மூலத்தை ஆதரித்து வாக்களிப்பதை மறுதலிக்க சில குழுக்கள் முயற்சிசெய்து வருவதாகக் கிடைக்கப்பட்ட அறிக்கைகளையடுத்தே இச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஜனநாயக அடிப்படையில் உத்தேச மாகாணசபைகள் சட்ட மூலத்தை எதிர்க்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

சட்ட மூலத்துக்கு ஆதரவாக 114பேர் வாக்களித்தனர். (எ)